## கொடைக்கானல் நகராட்சி

1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், அட்டவணை III–ன் பிரிவு 2–ன் கீழ் 10.04.2023ஆம் நாள் திங்கள் கிழமை மாலை 4.30 மணிக்கு நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும். அது சமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/– பா.செல்லத்துரை,
நகர்மன்றத் தலைவர்,
நாள். 10.04.2023 கொடைக்கானல் நகராட்சி.

**பொருள் எண் – 1)**

கொடைக்கானல் போட் அண்ட் ரோயிங் கிளப் அமைப்பினால் 12.12.2022 அன்று தனியார் படகு இயக்குவதை அனுமதிக்க கொடைக்கானல் படகு இயக்குதல் (முறைப்படுத்துதல்) துணை விதி 2022–ல் திருத்தம் மேற்கொள்ள வேண்டி, அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளனர். மேற்படி மனு மீது கொடைக்கானல் நகராட்சி ஆணையரின் தனித்த குறிப்புரையினை அரசு கடிதம் எண்.534/MA5–1/2023–1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை MAV(1) நாள்.03.02.2023–ம் தேதிய கடிதம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.28583/208/TP2. நாள். 14.02.2023 ஆனது, கொடைக்கானல் நகராட்சிக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. கொடைக்கானல் ஏரியில் படகு இயக்குதல், (முறைப்படுத்துதல்) துணை விதி 2022–ல் தனியார் படகு இயக்குவது தொடர்பாக, திருத்தம் மேற்கொள்வது குறித்தும்,

2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை அவர்களின் 27.3.2023ம் தேதிய கடிதத்தில், கொடைக்கானல் ஏரியில் படகு செலுத்துவதற்கு வசூலிக்கும் கட்டணத்தில் 40 சதவீதம் பங்குத் தொகையை நகராட்சிக்கு செலுத்துவதில் சிரமம் உள்ளது என்றும், படகுகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு TTDC–ல் அனுமதி பெற்றுள்ளபடியால், நகராட்சியிடம் மீண்டும் பதிவு செய்ய தேவையில்லை என்றும், மேற்படி கட்டணம் வசூலித்தல் மற்றும் படகுகளை பதிவு செய்தல் நடவடிக்கையில் இருந்து விலக்கு அளிக்குமாறும், கூடுதல் அரசு தலைமை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களுக்கு கோரிக்கை அனுப்புமாறு முதன்மை அரசு செயலாளர், சுற்றுலா மற்றும் பண்பாடு அறநிலையத்துறை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இக்கடித நகல் நகராட்சிக்கு பெறப்பட்டுள்ளது குறித்தும்,

வரப்பெற்ற கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. மன்றம் இப்பொருள் குறித்து விவாதித்து முடிவு செய்யலாம்.

அலுவலக குறிப்பு –

1) அரசாணை நிலை எண். 105 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 26.06.2009 ன்படி ஏரியின் முழுக் கட்டுப்பாடும் நகராட்சி வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. ஆதலால், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306ன் கீழ் துணை விதிகளை உள்ளூர் மக்களின் நலனுக்கேற்ப துணை விதிகளை உருவாக்க நகர்மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, கொடைக்கானல் ஏரியில் படகு இயக்குதல் (முறைப்படுத்துதல்) துணை விதி–2022 ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்துணை விதிகள் 25.02.2023 முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. தற்போது அரசு கட்டுப்பாட்டில் உள்ள நகராட்சி மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலம் இயக்கும் படகுகளே சுற்றுலா பயணிகளின் படகு சவாரி செய்வதற்கு போதுமானதாக உள்ளது. எனவே, தனியாருக்கு படகு இயக்க அனுமதி வழங்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை. எனவே, துணை விதிகளில் திருத்தம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழவில்லை என மன்றம் தீர்மானிக்கலாம்.

2) கொடைக்கானல் ஏரியின் முழுக்கட்டுப்பாடும், பராமரிப்பும் நகராட்சியின் வசம் உள்ளது. ஏரியினை சுற்றிலும், துரய்மையாக பராமரித்தல், ஏரியின் நடைபாதையினை தினசரி சுத்தம் செய்தல், ஏரியின் உள்புறம் உள்ள களைச் செடிகளை அப்புறப்படுத்துதல், திடக்கழிவு மேலாண்மை பணிகள் , தெருவிளக்கு வசதி, கழிப்பறை வசதி மற்றும் பராமரித்தல் போன்ற அனைத்து பணிகளுமே நகராட்சியின் மூலமே மேற்கொள்ளப்பட்டு, அதற்கான செலவினங்களும் நகராட்சியின் பொது நிதியின் மூலமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சியின் பொது நிதியின் மூலம் ஏரி மற்றும் ஏரியின் சுற்றுபுறத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதினால், நகர் பகுதியில் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கு நகராட்சியில் போதுமான நிதி இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், தொடர்ந்து ஏரி மற்றும் ஏரியினை சுற்றிலும் உள்ள பகுதிகளை பராமரித்திட நகராட்சிக்கு கூடுதலான தொடர் செலவினம் ஏற்பட்டு வருகிறது. ஏரி பராமரிப்பு குறித்த செலவினங்களில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எவ்வித பங்களிப்பும் இல்லாமல், ஏரியில் படகு செலுத்தி வருவாயை மட்டுமே ஈட்டி வருகிறது. மேலும், ஏரியின் முழுக்கட்டுப்பாடும் நகராட்சி வசம் இருப்பதாலும், ஏரியினை நிர்வகிக்கும் முழு உரிமையும் நகர் மன்றத்திற்கே இருப்பதாலும், நகரின் பொது நலன் கருதி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் வசூலிக்கும் கட்டணத்தில் 40% பங்குத் தொகையினை செலுத்துவதில் இருந்து விலக்களிக்க இயலாது என்பதனை தெரிவித்தும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநரின் கோரிக்கையினை திரும்ப பெற்றுக் கொள்ள வலியுறுத்த கோரியும் அரசுக்கு கடிதம் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **413, நாள். 10.04.2023** |

**நகர்மன்றத் தீர்மானம் :**

மன்றம் கவனமுடன் நன்கு ஆராய்ந்து, ஆலோசித்து கீழ்க்கண்டவாறு முடிவு செய்கிறது.

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான நட்சத்திர ஏரியில், படகு இயக்குவது தொடர்பாக ஏற்கனவே நகர்மன்றத் தீர்மான எண்கள் 146 நாள். 12.8.2022 மற்றும் 182 நாள்.21.09.2022 ஆனது நன்கு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, விவாதத்திற்கு பின்பே தீர்மானம் பொது நலன் கருதி நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், கொடைக்கானல் ஏரியினை பாதுகாப்பதற்கும், சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பதற்கும், அதனை சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் அழகுப்படுத்திடவும், இதுநாள்வரை தொடர்ந்து, நகராட்சி பொதுநிதியே பயன்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி பொது நிதி போதுமான அளவு இல்லாத நிலையில், ஏரியினை பாதுகாப்பது மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் பராமரிப்பு செய்வதற்கு மிகுந்த சிரமமான நிலையில் உள்ளது. தற்போது, ஏரி நீரினை சுத்திகரிக்கவும், மேம்படுத்தவும் நவீன முறையிலான காற்றோட்டஇயந்திரங்கள் (Aerators) மற்றும் மிதவை தாவர பையோ பிளாக் சுத்திகரிப்பு முறை (Bio Block Purifier & Acquabonics) போன்றவை நிறுவ பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஆண்டு பராமரிப்பு செலவு நகராட்சிக்கு மேலும் பெரும் நிதி சுமையாக மாறிவிடும். ஏரியில் படகு இயக்குவதன் மூலம் பெறப்படும் வருவாயினை கொண்டு, ஏரிமேம்பாட்டு பணிகளுக்கும், சுற்றுலா வளர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்தப்பட இருக்கிறது.

மேலும், நகராட்சிக்கு சொந்தமான ஏரியில், துணை விதிகளை உருவாக்கவும், அதனை செயல்படுத்திடவும், நிதி ஆதாரங்களை பெருக்கவும் நகர்மன்றத்திற்கு முழு உரிமை உள்ளது. மேலும், அரசு கட்டுப்பாட்டில் உள்ள நகராட்சி மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலம் இயக்கும் படகுகளே சுற்றுலா பயணிகளின் படகு சவாரிக்கு போதுமானதாக உள்ளதால், தனியாரின் மூலம் படகுகள் இயக்க வேண்டிய நிலை இல்லை. ஆதலால் கொடைக்கானல் நகராட்சி ஏரியில் படகு இயக்குதல் (முறைப்படுத்துதல்) துணை விதி 2022–யை திருத்தம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை" என்றும்,

மேலும், அலுவலக குறிப்பில் கண்டுள்ளவாறு, நகரின் பொது நலன் கருதி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் வசூலிக்கும் கட்டணத்தில் 40% பங்குத் தொகையினை செலுத்துவதில் இருந்து விலக்களிக்க இயலாது என்பதனை தெரிவித்தும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநரின் கோரிக்கையினை திரும்ப பெற்றுக் கொள்ள வலியுறுத்த கோரியும் அரசுக்கு கடிதம் அனுப்பிட மன்றம் முடிவு செய்கிறது.

*******

**பொருள் எண் – 2)**

அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.24.6.2022–ல் வார்டு குழு மற்றும் பகுதி சபை கூட்டம் நடத்த வார்டு செயலாளர்கள், பகுதி சபா செயலாளர்கள் நியமனம் செய்து, ஒவ்வொரு 3 மாதத்திற்கு ஒருமுறை கூட்டம் வார்டுகளில் நடத்தப்பட வேண்டும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் அரசாணையின்படி, பணிகளை செயல்முறைப்படுத்தும் வகையில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம் செய்து குழு அமைக்கப்பட்டுள்ளது.

இப்பணிகள் மேற்கொள்ள வார்டு செயலாளர்கள் மற்றும் வார்டு பகுதி சபா செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் நடைபெற்ற கூட்டத்திற்கான விபரங்களை பதிவு செய்யவும், உறுப்பினர்களிடம் கையொப்பம் பெற்று பேரேடுகள் பராமரிக்கப்பட வேண்டியுள்ளது.

வார்டு செயலாளர்கள் மற்றும் வார்டு பகுதி செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு பேரேடுகள் வழங்க வேண்டியுள்ளது. "அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில்" பேரேடுகள் வாங்கவும், மேற்கண்ட பேரேடுகள் வாங்க உத்தேச செலவினம் ரூ.2,00,000/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். (கோப்பு எண்.3706/2017/எப்.1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **414, நாள். 10.04.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–பா.செல்லத்துரை
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்(பொ),
கொடைக்கானல் நகராட்சி.